# பத்திரிக்கை செய்தி

**உதவி இயக்குநர், மருந்து கட்டுபாட்டு துறை அதிகாரிக்கு 2 வருட கடுங்காவல் தண்டனையும் ரூ.10,000/- அபராதம் விதித்து கீழ்மை நீதிமன்றம் விதித்த தீர்பபை உயர்நீதிமன்றம் உறுதி செய்தது.**

சென்னை, திருவள்ளூர் ராஜாஜிபுரம் கலைவாணர் தெருவைச் சேர்ந்த திரு.அசோக் என்பவர் ராகேவேந்திரா பார்மா டிஸ்ட்ரிபுயூட்டர்ஸ் என்ற பெயரில் மருந்து விற்பனை முகமை நடத்தி வந்துள்ளார்.இது தவிர அவரது நண்பர் திரு.சுதர்சன் அவர்கள் தனியாக"ராம்சன் மெடிக்கல் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் என்ற மருந்து ஏஜென்சியினை நடத்தி வந்துள்ளார். இந்நிலையில் தனது நண்பர் திரு.சுதர்சன் கடந்த 30.06.2014 அன்று நடந்த சாலை விபத்தில் இறந்துவிட்டார். மேற்படி இரண்டு மருந்து ஏஜென்சிகளின் உரிமத்தின் பெயர் மாற்றம் செய்ய தானும், தனது நண்பர் குடும்பத்தாரும் ஏற்பாடு செய்தனர்.மேற்படி இரண்டு மருந்து ஏஜென்சிகளின் உரிமத்தின் பெயர் மாற்றம் செய்யவேண்டி திருவள்ளூர் உதவி இயக்குநர், மருந்து கட்டுப்பாடு அலுவலகத்திற்குச் சென்று உரிமையாளர் பெயர் மாற்றம் கோரி விண்ணப்பம் கொடுத்துள்ளனர். அப்போது உதவி இயக்குநர், மருந்து கட்டுப்பாட்டு துறை அதிகாரி திரு,விஜயராகவன் அவர்கள் இரண்டு மருந்து ஏஜென்ஸிக்கும் சேர்த்து தனக்கு ரூ.20,000/- லஞ்சம் கேட்டுள்ளார். எனவே மனுதாரர் திரு.அசோக் எதிரி திரு,விஜயராகவன் உதவி இயக்குநருக்கு லஞ்சம் தர விருப்பம் இல்லாததால் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்தில் 25.09.2014 ஆம் தேதி புகார் மனு கொடுத்துள்ளார். அதன் பேரில் எதிரி விஜயராகவன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு எதிரி, புகார்தாரர் திரு.அசோக்கிடமிருந்து லஞ்சப்பணம் ரு-20,000/- அவரது அலுவலகத்தில் கேட்டுப் பெற்றப்போது கையும் களவுமாக பிடிக்கபட்டு கைது செய்யப்பட்டார். பின்னர் எதிரி திரு.விஜயராகவன் அவர்கள் லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக திருவள்ளூர் தலைமை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு கடந்த 07.03.2016 ஆம் தேதி எதிரி விஜயராகவனுக்குஊழல் தடுப்பு சட்டப்பிரிவு 7 -ன்படி எதிரிக்கு 1 வருடம் கடுங்காவல் தண்டனையும், மற்றும் அபராதம் ரூ.10,000/- மற்றும் பிரிவு 13(2) r/w 13(1)(d) of PC Act – ற்கு 2 வருடம் கடுங்காவல் தண்டணையும் மற்றும் அபராதம் ரூ.10,000/-ம் தண்டனையாக விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

மேற்படி தீர்ப்பின் மீது எதிரி விஜயராகவன் கீழமை நீதிமன்றத்தின் தண்டனை தீர்ப்புக்கு எதிராக, சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து (Crl.A.No.219/2016) வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது. இந்நிலையில் இன்று 21-04.2023 ஆம் தேதி வழக்கு விசாரணை முடிவாக கீழமை நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட தண்டணை உறுதி செய்யப்படுகிறது என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு தண்டணை உறுதி செய்யப்பட்டது.